**இன்றைய வேளாண் செய்திகள்**

## சென்னையில் "சதத்தை' எட்டியது வெயில்



தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூரில் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 30) 104 டிகிரி வெயில் பதிவானது. இந்த ஆண்டில் முதல்முறையாக சென்னையில் 100 டிகிரிக்கு மேல் வெயில் ஞாயிற்றுக்கிழமை பதிவானது. கோவை, தருமபுரி, மதுரை, கரூர் பரமத்தி, பாளையங்கோட்டை, சேலம், திருச்சி ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது.

ஞாயிற்றுக்கிழமை பதிவான வெயில் அளவு

(டிகிரி ஃபாரன்ஹீட்டில்):

வேலூர் 104

திருச்சி, பாளையங்கோட்டை, தருமபுரி 103

கரூர் பரமத்தி 102

மதுரை, சென்னை மீனம்பாக்கம் 101

கோவை 100

சென்னை நுங்கம்பாக்கம் 98

கடலூர் 95

**உற்பத்தி குறைப்பால் கறிக்கோழி விலை உயர்வு**

**பல்லடம்,**

கறிக்கோழி நுகர்வு குறைந்ததை சமாளிக்க உற்பத்தியாளர்கள் உற்பத்தியை 25 சதவீதம் குறைத்ததால் கறிக்கோழி கடந்த 3 நாள்களாக விலை உயர்ந்துள்ளது.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் பகுதியில் 10 ஆயிரம் பண்ணைகளில் தினசரி 6 லட்சம் கறிக்கோழி உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் 2 லட்சம் கறிக்கோழிகள் கேரளத்திற்கு அனுப்பப்படுகிறது. 4 லட்சம் கறிக்கோழிகள் தமிழகத்தில் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது கோடை காலம் என்பதால் பொதுமக்களிடம் கோழி இறைச்சி நுகர்வு குறைந்துள்ளது. இதனால் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கடந்த 55 நாட்களாக சரிந்து வந்தது. கடந்த பிப்ரவரி 2-ஆம் தேதி பண்ணை விலை கிலோ ரூ. 71 ஆக இருந்தது. இது பின்னர் படிப்படியாக சரிந்து கடந்த 25-ஆம் தேதி ரூ. 58-க்கு குறைந்தது. இவ்விலையால் கறிக்கோழி பண்ணை உற்பத்தியாளர்கள் நஷ்டத்திற்கு ஆளாகினர்.

கோழி உற்பத்தியை குறைத்தால் சந்தையில் கோழி இறைச்சிக்கு கிராக்கி ஏற்பட்டு விலை உயரும் என்று கறிக்கோழி பண்ணை உற்பத்தியாளர்கள் கருதினர். மேலும் தமிழகத்திலிருந்து கேரளத்திற்கு விற்பனை செய்யப்படும் கறிக்கோழிகள், கேரள மாநில அரசின் தடையால் விலை மற்றும் விற்பனை வெகுவாக குறைந்துள்ளது.

இதன் காரணமாக கடந்த மாத துவக்கத்தில் பண்ணைகளில் உற்பத்தியை 25 சதவீதம் குறைத்தனர். கறிக்கோழி உற்பத்தி குறைப்பு காரணமாக கடந்த 3 நாள்களாக கறிக்கோழிகள் வரத்து சந்தையில் குறைந்துள்ளது. இதனால் கடந்த 27-ஆம் தேதி ஒருகிலோ கறிக்கோழி ரூ. 68 ஆக விலை உயர்ந்து நிலை பெற்றது. கடந்த 4 நாள்களாக இதே விலை நீடிக்கிறது. பண்ணை விலைக்கேற்ப உயிருடன் கறிக்கோழி சில்லரை விற்பனை விலை ரூ. 90-க்கு விற்கப்படுகிறது. ஒரு கிலோ கறிக்கோழி உற்பத்தி செய்ய சராசரியாக ரூ. 70 ஆகிறது. தற்போது உற்பத்தி செலவை விட ரூ. 2 குறைவாக தான் கறிக்கோழி கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ரூ. 70-க்கு மேல் பண்ணை கொள்முதல் விலை உயர்ந்தால் தான் கறிக்கோழி பண்ணை உற்பத்தியாளர்களுக்கு லாபம் கிடைக்கும். தற்போதைய பண்ணை கொள்முதல் விலை பெரும் நஷ்டத்தில், சிறு நஷ்டமாக மாறியுள்ளது. இது குறித்து கோழிப்பண்ணையாளர் ஒருவர் கூறியது:

கறிக்கோழிகளின் விற்பனையில் இருக்கும் மந்த நிலை சீராகும் வரை கறிக்கோழி உற்பத்தியில் 25 சதம் உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளது. கேரளத்திற்கு கொண்டு செல்லப்படும் தமிழக கறிக்கோழிகளுக்கு அம்மாநில அரசு ஒரு கிலோவிற்கு ரூ. 10 நுழைவு வரி விதிக்கிறது. இதனால் கேரள மக்கள் கூடுதல் விலை கொடுத்துதான் கோழி இறைச்சி வாங்க வேண்டியது உள்ளது. நுழைவு வரியை கேரள அரசு நீக்க வேண்டும். அதனால் அம்மாநிலத்தில் விலை குறைந்து கோழி இறைச்சி நுகர்வு அதிகரிக்கும் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தீவிரம் ! : குறுவை பட்ட நாற்று விடும் பணி... : 4,000 ஏக்கர் சாகுபடி எதிர்பார்ப்பு**




**கம்மாபுரம்**: கம்மாபுரம் பகுதி விவசாயிகள், குறுவை பட்டத்தில் நாற்று விடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கடலூர் மாவட்டத்தில், ஆண்டுதோறும் பிப்ரவரி, ஏப்ரல் மாதங்களில் நவரைப் பட்டத்திலும், ஜூன், ஆகஸ்ட் மாதங்களில் குறுவைப் பட்டத்திலும், செப்டம்பர், டிசம்பர் மாதங்களில் சம்பா பட்டத்திலும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. கம்மாபுரம் பகுதியில், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன், சம்பா அறுவடை முடிந்து, விவசாயிகள் உளுந்து, பச்சைப் பயறு விதைத்தனர். இவற்றை விதைப்பு செய்யாத விவசாயிகள் நவரைப் பட்ட நெல் சாகுபடி செய்தனர். உளுந்து, பச்சைப் பயறு அறுவடை செய்த கம்மாபுரம், தே.பவழங்குடி, காவனூர், மருங்கூர், சி.கீரனூர், க.தொழூர், வி.குமாரமங்கலம், கோபாலபுரம், சு.கீனனூர், கார்கூடல் உட்பட 15க்கும் மேற்பட்ட கிராம

விவசாயிகள் போர்வெல் பாசனம் மூலம் குறுவைப் பட்டத்திற்கு நாற்றுவிடும் பணியைத் துவக்கியுள்ளனர். வயலில் இயற்கை உரத்திற்காக ஆடு, மாடுகளை கிடை கட்டி வருகின்றனர்.

கம்மாபுரம் வட்டார வேளாண் விரிவாக்க மைய உதவி இயக்குனர் சம்பத்குமார் கூறுகையில், "கம்மாபுரம் வட்டாரத்தில், 4,000 ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது. ஏ.டி.டி., - 43, ஏ.டி.டி., -45, ஏ.எஸ்.டி.,-16 சான்று விதைகள் கம்மாபுரம், காவனூர், அரசக்குழி வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் இதுவரை 22 டன் விதை, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், தேவையான விதை இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 10 டன் இயற்கை தொழு உரமிட்டு சாகுபடி செய்தால், அதிக மகசூல் கிடைக்கும். நாற்று விடும்போது 10 கிராம் சூடோமோனசை ஒரு கிலோ விதையில் கலந்து, 24 மணி நேரம் விதை நேர்த்தி செய்த பின், விதைக்க வேண்டும்' என்றார். காவனூர் விவசாயி முருகன் கூறுகையில், "கடந்த மூன்று ஆண்டுகளாக மணிமுக்தாறு, வெள்ளாறுகளில் மழை வெள்ளம் ஓடவில்லை. மேலும், என்.எல்.சி., விரிவாக்கப் பணி காரணமாக இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. மின் தடையால் போர்வெல் பாசனம் செய்ய சிரமமாக உள்ளது' என்றார்.

## சென்னை வானிலை ஆய்வு மைய துணை இயக்குனர் ஜெனரலாக பாகுலேயன் தம்பி நியமனம்



**சென்னை**: சென்னை வானிலை ஆய்வு மைய துணை இயக்குனர் ஜெனரலாக இருந்த, ஒய்.இ.ஏ.ராஜ் ஓய்வு பெற்றார். புதிய துணை இயக்குனர் ஜெனரலாக, பாகுலேயன் தம்பி பொறுப்பேற்றுக் கொண்டார். இந்திய வானிலை ஆய்வுத் துறையின் கீழ், சென்னையில், மண்டல வானிலை ஆய்வு மையம் செயல்படுகிறது. இதன், துணை இயக்குனர் ஜெனரலாக, ஒய்.இ.ஏ.ராஜ் செயல்பட்டு வந்தார். இவர்,

வடகிழக்கு பருவமழை குறித்து, நீண்டகாலமாக ஆய்வுகள் மேற்கொண்டவர். 22 ஆண்டுகளாக, சென்னை வானிலை ஆய்வு மையத்தில், பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.

ஐந்து ஆண்டாக, மண்டல துணை இயக்குனர் ஜெனரலாக இருந்த ராஜ், நேற்றுடன் ஓய்வு பெற்றார். புதிய துணை இயக்குனர் ஜெனரலாக, சென்னை துறைமுக பொறுப்புக் கழகத்தில் செயல்பட்டு வரும், "டாப்ளர் ரேடார்' மையத்தின் இயக்குனரான, பாகுலேயன் தம்பி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய வானிலை ஆய்வுத் துறையில், 1980ல் சேர்ந்த பாகுலேயன் தம்பி, கடந்த, 34 ஆண்டுகளாக, வானிலை மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பிரிவுகளில் பணியாற்றியுள்ளார். பாகுலேயன் தம்பி, நேற்று புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

## கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ. 70 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

**ராசிபுரம்**: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 70 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம், நேற்று நடந்தது.

சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 4,066 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

டி.சி.எச்., ரகம் அதிக பட்சமாக, 6,789 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 5,699 ரூபாய்க்கும், ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 5,209 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 4,609 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று, 70 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம் ஆகிய பகுதியைச் சேர்ந்த, 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள், பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**வீழ்ச்சி ! : பனிப்பொழிவால் பரங்கிக்காய் விலை... : வானூர் பகுதி விவசாயிகள் கவலை.**

**வானூர்**: பனிப்பொழிவு காரணமாக பரங்கிக்காய் விலை திடீர் வீழ்ச்சியடைந்துள்ளதால் வானூர் பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளர். வானூர் தாலுகா உப்புவேலூர், புதுக்குப்பம், டி. பரங்கனி, காரட்டை, தலக்காணிக்குப்பம், கிளாப்பாக்கம், நல்லாவூர், தென்கோடிப்பாக்கம் பேராவூர், உலகாபுரம், ராயபுதுப்பாக்கம், ஆப்பிரம்பட்டு, மற்றும் மரக்காணம் பகுதியில் சில கிராமங்களில் பணப்பயிராக பரங்கிக்காய் பயிரிட்டுள்ளனர். மூன்று மாத பயிரான பரங்கிக்காய் தை மாதம் முதல் வாரத்தில் விதைப்பு செய்கின்றனர். செடி வளர ஆரம்பித்தவுடன் வாரத்திற்கு ஒரு முறை வீதம் 12 தடவை தண்ணீர் பாய்ச்சுகின்றனர். செடி முளைத்த 15 நாளில் ஒரு முறை வீதம் இரண்டு மாதத்திற்கு களை எடுக்கின்றனர். செடிகள் வளர்ந்து அடைத்து கொள்வதால் புற்கள் முளைக்காது.

மருந்து தெளித்தல்

பரங்கிக்காய் பயிருக்கு பூச்சி தாக் குதல் இல்லை என்றாலும், பூ மற்றும் காய் காய்க்கும் தருணத்தில் இரண்டு முறை மருந்து தெளிக்க வேண்டும். பூச்சி தாக்குதல் அதிகமாக இருந்தால், இரண்டு முதல் ஆறு தடவை மருந்து தெளிக்க வேண்டியிருக்கும்.

ஒரு ஏக்கருக்கு டி.ஏ.பி., மூன்று மூட்டையும், யூரியா 1, பொட்டாஸ் ஒரு மூட்டை அடிஉரமாக இடவேண்டும். தற்போது வானூர் பகுதியில் பரங்கிகாய் அறு வடை செய்யும் தருவாயில் உள்ளது.

தயக்கம்

பரங்கிங்காய் அறுவடை நேரத்தில் திருவண்ணாமலை, செஞ்சி, சேலம், திண்டிவனம், வந்தவாசி, விழுப்புரம், காஞ்சிபுரம் பகுதியில் உள்ள வியாபாரிகளுக்கு போன் மூலம் தகவல் கொடுத்தால் தோட்டத்திற்கு வந்து காய்களை வாங்கி செல்வர்.

பனிப்பொழிவால் வியாபாரிகள் வர மறுக்கின்றனர்.

விலை வீழ்ச்சி

தற்போது பனிப்பொழிவு அதிகமாக உள்ளதாலும் வானிலை மாற்றங்களாலும் சமையலுக்கு பயன் படும் பரங்கிக்காய்க்கு கேரளா மக்கள் மத்தியில் வரவேற்பு

இல்லை. கடந்த ஆண்டு ஒரு ஏக்கர் பரங்கிக்காய் ஒரு டன் 7000 ரூபாய் முதல் பத்தாயிரம் வரை விலை கொடுத்து எடுத்து சென்றனர்.
தற்போது ஒரு டன் 1500 ரூபாய் கொடுத்து ஏற்றி செல்ல ஆள் இல்லை. இன்னும் சில நாட்களில் வியாபாரிகள் வரவில்லை என்றால் காய்களை உடைத்து , செடியுடன் உழவு செய்துவிட்டு மாற்று பயிர் செய்ய உள்ளதாக விவசாயிகள் கவலையுடன் கூறுகின்றனர்.

## பெல்லாரி வெங்காயம் பயிரிடுவதில் ஆர்வம்

**சின்னசேலம்**: சின்னசேலம் அருகே ஈரியூர் கிராமத்தில் விவசாயி ஒருவர் புதிய முயற்சியாக பெல்லாரி வெங்காயம் பயிரிட்டு விற்பனை செய்து வருகிறார்.
சின்னசேலம் அருகே ஈரியூர் கிராமத்தைச் சேர்ந்தவர் அண்ணாதுரை (45). மயூரா உழவர் மன்றம் மூலம் ஸ்பிக், கிரீன் ஸ்டார் நிறுவனம் சார்பில் தூத்துக்குடியில் நடந்த பயிற்சியில் கலந்துக் கொண்டு புதிய முயற்சியாக பெல்லாரி பயிரிடுவதை கற்றுக் கொண்டு விவசாயம் செய்ய துவங்கினார்.
ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதை தேவைப்படுகிறது. விதை நாற்றுவிட்டு 45 நாட்கள் கழித்து பறித்து நட வேண்டும். 110 நாட்களில் விளைந்து அறுவடை செய்து விடலாம். ஏக்கருக்கு 15 டன் மகசூல் கிடைக்கும். தலைவாசல் மார்க்கெட்டில் விலை குறைவாக இருப்பதால் ஆட்டோவில் அனைத்து கிராமங்களுக்கும் சென்று 6 கிலோ 100 ரூபாய்க்கு விற்கிறார். மற்ற விவசாயிகளை போல் ஆண்டு பயிரை விவசாயம் செய்யாமல் புதிய முயற்சியாக பெல்லாரி வெங்காயத்தை பயிரிட்டுள்ளது அப்பகுதி விவசாயிகளிடம் மிகுந்த வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

## அதிகரிக்கும் கோடை வெப்ப தாக்கம்; கால்நடைகளை பாதுகாக்க அறிவுரை

**திருப்பூர்** : ""கோடை வெப்பத்தின் தாக்கத்தால், கோழிகள் மற்றும் கால்நடைகள் "வெப்ப அயர்வு' நோயால் உயிரிழக்க அதிக வாய்ப்புள்ளது," என, கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் செல்வராஜ் கூறினார். அவர் கூறியதாவது: வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், கோழிகள் மற்றும் கால்நடைகள் "வெப்ப அயர்வு' நோயால் உயிரிழக்கக்கூடிய அபாயம்

உள்ளது. உடலின் வெப்பத்தை வெளியேற்ற, மனிதர்களுக்கு வியர்வை சுரப்பி உள்ளது; கோழிகளுக்கு வியர்வை சுரப்பி இல்லை; வாயை திறந்து, உடல் வெப்பத்தை சிறிதளவே வெளியேற்ற முடியும்.

வெயில் நேரத்தில் கோழிகள் அதிக தீவனம் சாப்பிடும்போது, அதை ஜீரணிக்க, அதிக வெப்ப ஆற்றல் உடலுக்குள் ஏற்படுகிறது.

அதை தவிர்க்க, காலை 7.00 மணிக்குள், அளவான தீவனம் கொடுக்க வேண்டும்; மாலை 4.00 மணிக்கு பிறகே, கோழிகளுக்கு தீவனம் கொடுக்க வேண்டும். பகல் நேரத்தில், தீவனம் கொடுக்கக்கூடாது; வைட்டமின் "சி' கலந்த குளிர்ந்த நீரை மட்டுமே பருக கொடுக்க வேண்டும். தீவன தொட்டியை உயர்த்திக்கட்ட வேண்டும்.

தண்ணீரில் நனைத்த சாக்குகளை, கோழி பண்ணையின் இரு பக்கவாட்டு பகுதிகளிலும் கட்டி தொங்கவிட்டால், பண்ணைக்குள் குளிர்ந்த காற்று வீசும்; வெப்பமும் கணிசமாக குறையும்.

கால்நடைகளுக்கு வெப்ப அயர்வை தடுக்கும், "எலட்ரோ கேர்' சத்துபொருளை, நீரில் கலந்து வைக்க வேண்டும். மாட்டுக்கொட்டகைகளை பனை மற்றும் தென்னை ஓலைகளால் வேய வேண்டும்.

பக்கவாட்டு பகுதிகளில் நனைந்த சாக்குகளை கட்டி, குளிர்ந்த காற்று கால்நடைகளுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும். காலை 10.00 மணிக்கு முன்னதாகவும், மாலை 4.00 மணிக்கு பின்பும், மேய்ச்சல் நிலங்களுக்கு கால்நடைகளை ஓட்டிச்செல்ல வேண்டும்.

பகல் வெயிலில் மாடுகளை கட்டி வைக்கக் கூடாது. இந்த எச்சரிக்கை முறைகளை கையாண்டால், கால்நடைகளை வெப்ப அயர்வு நோய் தாக்காமல், தடுக்கலாம். இவ்வாறு, அவர் கூறினார்.

## விவசாய படிப்புகளுக்கு வரவேற்பு

"வேளாண் அறிவியல்' குறித்து தமிழ்நாடு விவசாய பல்கலை உதவி பேராசிரியர் சுதாகர்: விவசாயத்துறை சார்ந்து பல்கலையில் 13 பாடதிட்டங்கள் உள்ளன. வேலை வாய்ப்புகள் அதிகம் இத்துறையில் உள்ளன. பி.எஸ்.சி., விவசாயம் மற்றும் தோட்டக்கலை பிரிவுகளில் படித்தால் இரண்டிற்கும் ஒரே வேலை வாய்ப்பு தான்.

பி.எஸ்.சி., ஹோம் சயின்ஸ், வனவியல் போன்ற படிப்புகளுக்கு வேலை வாய்ப்பு அதிகம் உள்ளன.

இத்துறையில் ஆராய்ச்சி தொடர்புடைய உயிர் தொழில் நுட்பம், "பயோ இன்பர்மேட்டிக்ஸ்' போன்ற படிப்புகளை தேர்வு செய்தால், முதுகலை படிப்புகளை தொடர வேண்டும்.

விவசாயம் சார்ந்த படிப்புகளுக்கு மே 2 வது வாரத்தில் விண்ணப்பங்கள் வழங்கப்படும். ஜூனில் கவுன்சிலிங், ஜூலை 28ல் கல்லூரிகள் திறக்கும்.

அரசு வேலை நிச்சயம் "கால்நடை அறிவியல் குறித்து திருப்பரங்குன்றம் கால்நடை அறிவியல் பல்கலை தலைவர் பண்ணை முருகானந்தம்:

கால்நடை அறிவியல் படித்தால் அரசு வேலை நிச்சயம். இத்துறை சார்ந்து 6 கல்லூரிகளில் 260 இடங்கள் உள்ளன. எம்.பி.பி.எஸ்., படிப்புக்கு இணையானது. கால்நடை அறிவியல் படித்த பலர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளைஎழுதி வெற்றிபெற்றுள்ளனர்.

தனியார் பண்ணைகள் மற்றும் வெளிநாடுகளில் கால்நடை அறிவியல் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இத்துறை சார்ந்த படிப்புகளை மாணவர்கள் தைரியமாக தேர்வு செய்யலாம்.

நாட்டின் வளர்ச்சிக்கான கல்வி "பயோடெக் மற்றும் ஹெல்த் சயின்ஸ்' குறித்து எம்.ஜி.ஆர்., பல்கலை டீன் டீக்காராமன்: பொறியியல் படிப்புகளுக்கு மாற்று "பயோடெக்' மற்றும் "ஹெல்த் சயின்ஸ்' படிப்புகள் தான்.

விவசாயத்துறையிலும், மருத்துவத்துறையிலும் ஏற்பட்டுள்ள புரட்சி, இப் படிப்புகளால் தான் ஏற்பட்டுள்ளன.

இத்துறை சார்ந்த படிப்புகளால் நம் நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலை வாய்ப்புகள் அதிகம்.

பசுமை புரட்சியால் விசாயத்துறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அது போல் மருத்துவத்துறையிலும் நாம் இக்கல்வியால் வளர்ந்து வருகிறோம்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### தொடர்கிறது வெயிலின் தாக்கம்



**சென்னை**: தமிழகத்தில் நேற்று 4 இடங்களில் 104 டிகிரி வெயில் கொளுத்தியது. தமிழகத்தில் நேற்று கரூர், திருச்சி, திருப்பத்தூர், வேலூர் ஆகிய இடங்களில் 104 என்ற அளவிலேதான் வெயில் இருந்தது. மதுரை, சேலம் ஆகிய இடங்களில் 103 டிகிரியும், சென்னை, தர்மபுரி, திருநெல்வேலி ஆகிய இடங்களில 102 டிகிரியும் வெயில் காணப்பட்டது. மற்ற இடங்களில் சராசரியாக 100 டிகிரி வரை வெயில் காணப்பட்டது.

### விளைச்சல் அமோகம் : சீரகம் விலை சரிவு



**சேலம்:** விளைச்சல் அதிகரிப்பால் சேலம் மார்க்கெட்டில் சீரகம் விலை குறைந்துள்ளது. ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் சீரகம் அதிகளவில் விளைகிறது. இந்த பகுதிகளில் விளையும் சீரகம், குஜராத் மாநிலத்தில் உள்ள

மத்திய மார்க்கெட்டில் இருந்து சேலம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. சேலம் செவ்வாய்பேட்டை மார்க்கெட்டில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சீரகம் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்கள் சீரகம் சீசன். இதனால் தற்போது சேலம் மார்க்கெட்டிற்கு புதிய சீரகம் அதிகளவில் விற்பனைக்கு வந்து கொண்டிருப்பதால், கடந்த ஒரு மாதமாக விலை குறைந்து வருகிறது.

### வானிலை ஆய்வு மைய டைரக்டர் ஜெனரல் ஓய்வு

**சென்னை,** : சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் நுங்கம்பாக்கத்தில் இயங்கி வருகிறது. இந்திய வானிலை ஆய்வுத்துறையில் கடந்த 34 ஆண்டுகளாக டாக்டர் ஒய்.இ.ஏ.ராஜ் பணியாற்றி வந்தார்.

குறிப்பாக சென்னை மண்டல அலுவலகமான நுங்கம்பாக்கம் அலுவலகத்தில் 22 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இதுதவிர இதே வானிலை ஆய்வு மையத்தின் துணை இயக்குனர் தலைவராக பணியாற்றினார்.

நேற்றுடன் அவர் பணிக்காலம் முடிவடைந்ததை அடுத்து நேற்று அவர் அப்பதவியில் இருந்து ஓய்வுபெற்றார்.டாக்டர் ராஜ் நேற்றுடன் ஓய்வு பெற்றதை அடுத்து அதே துறையில் டாப்ளர் வெதர் ரேடார் பிரிவின் இயக்குனராக உள்ள எஸ்.பகுலயன் தம்பி அப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று அவர் பொறுப்பேற்கிறார்.

### பாலக்கோடு தினசரி மார்க்கெட்டில் தக்காளி விலை அதிகரிப்பு

**பாலக்கோடு**, : தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் தினசரி காய்கறி மார்க்கெட் இயங்கி வருகிறது. இங்கு பாலக்கோடு மற்றும் சுற்றுப்புற பகுதிகளிலிருந்து தக்காளி மற்றும் காய்கறிகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இந்நிலையில், வரத்து சரிவால் தக்காளி உள்ளிட்ட காய்கறிகளின் விலை உயர்ந்து வருகிறது. கடந்த 28ம் தேதி ரூ150 வரையிலும் விற்பனை செய்யப்பட்ட ஒரு பெட்டி தக்காளி நேற்று ரூ220 ஆக அதிகரித்தது. காய்கறிகளின்

விலை விவரம் வரு மாறு(அடைப்பு குறிக்குள் பழைய விலை): 16 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ120 முதல் ரூ150 வரையிலும்(ரூ70 முதல் ரூ120 வரை), 25 கிலோ கொண்ட ஒரு பிளாஸ்டிக் பெட்டி தக்காளி ரூ220க் கும்(ரூ100 முதல் ரூ150 வரை), ஒரு கிலோ ரூ12 வரையிலும்(ரூ6 முதல் ரூ8 வரை) விற்பனை செய்யப்பட்டது. குண்டு கத்தரிக்காய் தி7 முதல் ரூ8 வரையிலும், பெல்ட் அவரை ரூ14 முதல் ரூ15 வரையிலும், பாகற்காய் ரூ14 முதல் ரூ15 வரையிலும், வெண்டைக்காய் ரூ20க் கும்(ரூ13 முதல் ரூ16 வரை), பச்சை கத்தரிக்காய் ரூ12(ரூ10), முட்டை கோஸ் ரூ2க்கும் விற்பனை செய்யப்பட்டது. கடும் வறட்சியால் செடியிலேயே வாடி வதங்கும் வெண்டைக்காய் பாலக்கோடு பகுதியில் கடும் வறட்சியின் காரணமாக காய்கறி பயிர்கள் கருகி பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வெண்டைக்காய் செடியிலேயே வாடி வதங்கி வருகிறது. இதனால், சந்தைக்கு வரத்து சரிந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:

பாலக்கோடு மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் காய்கறி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது, கோடைக்கு முன்னதாகவே வெயில் சுட்டெரித்து வருவதால் கடும் வறட்சி நிலவி வருகிறது. இதனால், செடிகளிலேயே காய்கறிகள் வாடி வதங்கும் நிலை காணப்படுகிறது. இதன் எதிரொலியாக சந்தைக்கும் வரத்து சரிந்து வருவதால் விலை உயர்ந்து வருகிறது என்றனர்.

## வேளாண் பல்கலையில் தேனீ வளர்ப்பு பயிற்சி

**கோவை,** : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதத்திற்கான பயிற்சி ஏப்ரல் 7ம் தேதி நடக்கிறது. இதில், தேனீ இனங்களை கண்டுபிடித்தல், பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம், தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம், தேனை பிரித்தெடுத்தல், தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம் குறித்த பயிற்சியளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் பயிற்சி நாள் காலையில் 9

மணிக்குள் வேளாண் பூச்சியியல் துறைக்கு வந்து, பயிற்சி கட்டணமாக ரூ250 நேரடியாக செலுத்த வேண்டும். பயிற்சி காலை 10 மணி முதல் 5 மணி வரை நடக்கிறது. பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். மேலும், விபரங்களுக்கு 0422-6611214 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**விளைச்சல் குறைவு: இளநீர் விலை கிடுகிடு உயர்வு**

**இளையான்குடி,** : விளைச்சல் குறைவால் இளநீர் விலை தற்போது உயர்ந்துள்ளது.

கோடை வெயில் சுட்டெரிக்க ஆரம்பித்துள்ள இந்த வேளையில் தாகத்தை தீர்க்க இளநீர், பழச்சாறு, தர்ப்பூசனி, வெள்ளரி போன்ற பொருட்களின் விற்பனை களைகட்டியுள்ளது. மேலும் குளிர்பானங்களின் விலையும் கனிசமாக உயர்ந்துள்ளது. மாவட்டத்தின் நகர்ப்புற பகுதிகளிலும், நெடுஞ்சாலை பகுதிகளிலும் பஸ் நிறுத்த பகுதிகளிலும் ஏராளமான இளநீர் கடைகள் அமைந்துள்ளன.

கடந்த 10 நாட்களுக்கு முன்பு வரை ரூ. 20க்கு விற்பனை செய்யப்பட்ட இளநீர், தற்போது ரூ. 30, ரூ. 35, என விலை உயர்ந்துள்ளது. பச்சை இளநீரையே பெரும்பாலானோர் விரும்பி வாங்கி அருந்துகின்றனர். திருப்புவனம், திருப்பாச்சேத்தி, நத்தம், ஆகிய பகுதிகளிலிருந்து விற்பனைக்காக இளநீர் காய்கள் கொன்டு வரப்படுகின்றன.

கடந்த ஆண்டும், நடப்பு ஆண்டிலும் மழை பெய்ய தவறியதால், இளநீர் விளைச்சல் கடுமையாக குறைந்துள்ளது. உற்பத்தி குறைவாலும், தேவை அதிகரிப்பாலும் இளநீர் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து இளநீர் வியாபாரி ஒருவர் கூறுகையில்,

வெளியூர் தோப்புகளிலிருந்து விற்பனைக்கு வாங்கி வந்து, 30, 35 ரூபாய்கு விற்றால்தான் கட்டுப்படியாகிறது. கோடை வெயில் சுட்டெரிக்க ஆரம்பித்துள்ளது. இனி அக்னி நட்சத்திர காலங்களில் இளநீர் விலை மேலும் உயரலாம், என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நடப்பு பருவத்தில் பருத்தி உற்பத்தி 3.76 கோடி பொதிகளாக இருக்கும்**



நடப்பு பருவத்தில் (2013 அக்டோபர் – 2014 செப்டம்பர்) பருத்தி உற்பத்தி 3.76 கோடி பொதிகளாக இருக்கும் என இந்திய பருத்தி கூட்டமைப்பு மதிப்பீடு செய்துள்ளது. இது முந்தைய மதிப்பீட்டைக் காட்டிலும் 15 லட்சம் பொதிகள் அதிகமாகும். (1 பொதி என்பது 170 கிலோ எடை கொண்டதாகும் )

பொதுவாக பருத்தி பருவம் அக்டோபர் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் நிறைவடைகிறது. ஆந்திரா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இரண்டு மாநிலங்களில் மகசூல் அதிகரித்துள்ளதால் பருத்தி உற்பத்தி அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது என இந்திய பருத்தி கூட்டமைப்பின் தலைவர் ஜெ.துளசிதரன் தெரிவித்தார். குஜராத்தில் பருத்தி உற்பத்தி 1.20 கோடி பொதிகளாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்தைய மதிப்பீட்டைக் காட்டிலும் 5 லட்சம் பொதிகள் குறைவாகும். மகாராஷ்டிராவில் உற்பத்தி 70 லட்சம் பொதிகளிலிருந்து 80 லட்சம் பொதிகளாகவும், ஆந்திராவில் 65 லட்சம் பொதிகளிலிருந்து 73 லட்சம் பொதிகளாகவும் உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மற்றும் ஓடிசா ஆகிய மாநிலங்களில் பருத்தி உற்பத்தி முறையே 5 லட்சம் மற்றும் 3 லட்சம் பொதிகளாக இருக்கும் என தெரிகிறது. குஜராத், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்கள் பருத்தி உற்பத்தியில்

முன்னணியில் உள்ளன. நடப்பு பருவத்தில் பருத்தி உற்பத்தி அதிகரிக்கும் என்பதால் ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**மாலத்தீவுக்கு 291 டன் பருப்பு ஏற்றுமதி செய்ய அனுமதி**



பொதுத்துறை நிறுவனங்கள் வாயிலாக 2016–17–ஆம் ஆண்டு வரை மாலத்தீவுக்கு 291 டன் பருப்பு வகைகள் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.2014–15 முதல் 2016–17–ஆம் நிதி ஆண்டு வரை அரசியல் உறவு அடிப்படையில் அந்நாட்டிற்கு பருப்பு ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வர்த்தக இயக்குனரகம் அறிவித்துள்ளது. இதன்படி, அடுத்த மூன்று ஆண்டுகளில் அந்நாட்டிற்கு முறையே 87.85 டன், 96.63 டன் மற்றும் 106.29 டன் பருப்புகள் ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் இதர நாடுகளுக்கு பருப்பு ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் சப்ளையை அதிகரிக்கவும், விலை உயர்வை கட்டுப்படுத்துவும் கடந்த 2006–ஆம் ஆண்டு முதல் பருப்பு ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது. நம் நாட்டில் தேவையை காட்டிலும் பருப்புகள் உற்பத்தி சுமார் 40 லட்சம் டன் குறைவாக உள்ளது. இதனையடுத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இறக்குமதி செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் பருப்பு உற்பத்தி 1.98 கோடி டன் அளவிற்கு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 98 லட்சம் டன் கொண்டை கடலையும் அடங்கும். ஆனால் கொண்டை கடலை உற்பத்தி 65 லட்சம் டன் அளவிற்கே இருக்கும் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். 2013 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான 6 மாதங்களில் 14 லட்சம் டன் பருப்பு இறக்குமதியாகியுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**அடுத்த மூன்று ஆண்டுகளில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 300 கோடி டாலராக அதிகரிக்கும்**



**கொச்சி,**

சர்வதேச சந்தையில் தேவைப்பாடு அதிகரித்து வருவதால் அடுத்த மூன்று ஆண்டுகளில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 300 கோடி டாலராக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**இயற்கை விவசாயம்**

சர்வதேச சந்தையில் இயற்கை விவசாய முறைகளில் உற்பத்தி செய்யப்பட்ட நறுமணப் பொருள்கள் விற்பனை சூடுபிடித்து வருகிறது. மொத்த நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியில் இதன் பங்களிப்பு இரண்டு சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. எனவே, இயற்கை விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக வடகிழக்கு மண்டலங்களில் சாகுபடி செய்யாத நிலங்களில் இதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், மொத்த ஏற்றுமதியில் மதிப்பு கூட்டப்பட்ட நறுமணப் பொருள்களின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது. எனவே, பதப்படுத்துதல், மதிப்பு கூட்டுதல், பிராண்டு மேம்பாடு மற்றும் புதிய தயாரிப்புகள் அறிமுகம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. இதன் ஓர் அங்கமாக வெவ்வேறு பகுதிகளில் நறுமணப் பொருள்கள் பூங்கா அமைக்கப்பட உள்ளது என நறுமணப் பொருள்கள் வாரியத்தின் தலைவர் ஏ.ஜெயதிலக் தெரிவித்தார். நறுமண பொருள்கள் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் ஆய்வு கூடங்கள் மற்றும்

பரிசோதனை கூடங்கள் அமைக்கப்பட உள்ளன. மேலும், வாசனை சாக்லேட் விற்பனை அதிகரிக்கும் வகையில் முன்னணி சாக்லேட் உற்பத்தியாளர்களுடன் பேசி வருவதாகவும் அவர் தெரிவித்தார். நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (ஏப்ரல்–டிசம்பர்) நறுமணப் பொருள்கள் எற்றுமதி அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் முறையே 27 மற்றும் 41 சதவீதம் அதிகரித்துள்ளது. சர்வதேச சந்தையில் தேவைப்பாடு அதிகரித்தது மற்றும் ரூபாய் மதிப்பு சரிவு போன்ற காரணங்களால் ஏப்ரல் – டிசம்பர் மாத காலத்தில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் முறையே 5.72 லட்சம் டன் மற்றும் ரூ.9,433 கோடியாக உயர்ந்துள்ளது.

**புதினா**

ஏற்றுமதியில் புதினா மற்றும் புதினா பொருள்கள் ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் 2.06 லட்சம் டன் மற்றும் ரூ.2,202 கோடியாக இருந்தது. சீரகம் உள்ளிட்ட நறுமண விதைகளின் ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் முறையே 96,500 டன் மற்றும் ரூ.1,282 கோடியாக உயர்ந்துள்ளது.

**வானிலை அதிகாரி ஓய்.இ.ஏ.ராஜ் ஓய்வு பெற்றார். புதிய அதிகாரியாக பகுலயன்**




**சென்னை,**

சென்னை வானிலை மையத்தின் துணை டைரக்டர் ஜெனரல் ஆக பணியாற்றிய விஞ்ஞானி ஓய்.இ.ஏ.ராஜ் நேற்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார்.

அவர் 34 வருடங்கள் வானிலைதுறையில் பணியாற்றி உள்ளார். அவருக்கு பதிலாக எஸ்.பகுலயன் தம்பி நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இன்று (செவ்வாய்க்கிழமை) துணை டைரக்டர் ஜெனரலாக பதவி ஏற்கிறார்.

இவரும் வானிலை மையத்தில் 34 வருடங்கள் பணியாற்றி வருகிறார்.

இவர் நேற்று வரை வானிலை ரேடார் இயக்குனராக இருந்தார்.

**கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதிநீர் தமிழக எல்லையை வந்தடைந்தது**



தமிழக எல்லையில் உள்ள தாமரைகுப்பம் ஜீரோ பாயிண்டிற்கு பாய்ந்து வரும் கிருஷ்ணா நதி நீர்.

**ஊத்துக்கோட்டை,**

கண்டலேறு அனையில் இருந்து திறந்து விடப்பட்ட கிருஷ்ணா நதி நீர் நேற்று காலை தமிழக எல்லையை வந்தடைந்தது.

கிருஷ்ணா நதி நீர்

கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின்படி ஆந்திர அரசு ஆண்டுதோறும் 12 டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாட்டுக்கு திறந்து விட வேண்டும்.

ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 8 டி.எம்.சி. தண்ணீரும், ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 4 டி.எம்.சி. தண்ணீரையும் பூண்டி ஏரிக்கு திறந்து விடவேண்டும்.

அதன்படி கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா நதி கால்வாயில் ஜனவரி மாதம் 13-ந் தேதி பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விட்டனர். கண்டலேறு அணையில் நீர்மட்டம் குறைந்ததால் கடந்த 5-ந் தேதி பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டது.

இதனால் பூண்டி ஏரியில் நீர் மட்டம் வெகுவாக குறைந்தது. இதனால் சென்னையில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டது. இதை கருத்தில் கொண்டு தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆந்திர மாநில பொதுப் பணித்துறை அதிகாரிகளை தொடர்பு கொண்டு கண்டலேறு அணையில் இருந்து மீண்டும் தண்ணீர் திறந்து விடும்படி கேட்டு கொண்டனர்.

தமிழக எல்லையை வந்தடைந்தது

அதன்படி கடந்த 26- ந் தேதி மாலை கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா நதி கால்வாயில் தண்ணீர் திறந்து விட்டனர். முதலில் வினாடிக்கு 200 கனஅடி வீதம் திறந்து விட்டனர். பின்னர் படிப்படியாக அதிகரித்தனர். தற்போது வினாடிக்கு 600 கனஅடி வீதம் திறக்கப்படுகிறது.

தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை அருகே உள்ள தாமரைகுப்பம் ஜீரோ பாயிண்டிற்கு நேற்று காலை 6 மணிக்கு கிருஷ்ணா நதி நீர் வந்தடைந்தது. வினாடிக்கு 30 கனஅடி விதம் வந்து கொண்டிருந்தது. இங்கிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பூண்டி நீர் தேக்கத்துக்கு இன்று காலை போய் சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. 3231 மில்லியன் கனஅடி தண்ணீரை சேமித்து வைக்கலாம்.

நேற்று மதியம் 12 மணிக்கு பூண்டி ஏரியில் 17.80 அடி நீர் மட்டம் பதிவானது. வெறும் 100 மில்லியன் கனஅடி நீர் மட்டும்தான் இருப்பு உள்ளது. தற்போது கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**



**பரமத்தி வேலூர்,**

பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை உயர்ந்து உள்ளது. இத னால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**வெற்றிலை பயிரீடு**

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா காவிரி கரையோர பகுதிகளில் உள்ள பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அணிச் சம்பாளையம், பொய்யேரி, நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

இங்கு விளையும் வெற்றிலைகள் சேலம், ஊட்டி, கோவை, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட் டங்களுக்கும், கர்நாடகா, ஆந்திரா, கேரளா, மகாராஷ் டிரா, குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் தினந்தோறும் லாரிகள் மற்றும் ரெயில்கள் மூலமாக அனுப்பப்பட்டு வருகிறது.

**விலை உயர்வு**

மேலும் பரமத்தி வேலூர் நான்கு ரோடு பழைய பைபாஸ் சாலையில் வெற்றிலை ஏல மார்க்கெட் உள்ளது. இங்கு வெற்றிலை ஏலம் நடைபெற்று வருகிறது. சென்ற வாரம் நடைபெற்ற ஏலத்தில் கற்பூரி இளங்கால் வெற்றிலை மார் 104 கவளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ.1,500–க்கும், வெள்ளைக்கொடி இளங்கால் வெற்றிலை

சுமை ஒன்று ரூ.3,000–க்கும், வெள்ளைக் கொடி முதியம் பயிர் ரூ.1,000–க்கும் ஏலம் போனது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் கற்பூரி இளங்கால் வெற்றிலை மார் 104 கவளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ.2,000–க்கும், வெள்ளைக் கொடி இளங்கால் வெற்றிலை சுமை ஒன்று ரூ.3,500–க்கும், வெள்ளைக்கொடி முதியம் பயிர் ரூ.1,500–க்கும் ஏலம் போனது. பரமத்தி வேலூர் பகுதியில் தற்போது உள்ளூர் பண்டிகைகள் அதிகளவில் நடைபெற்று வருவதால் வெற் றிலை விலை சற்று உயர்ந்து உள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

**கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு பயிற்சி முகாம்**

கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் போலீஸ் கூடுதல் டி.ஜி.பி. சைலேந்திரபாபு கலந்து கொண்டார்.

பயிற்சி முகாம்

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், நிர்வாகத்திறமை மற்றும் தகுதிகளை வளர்த்து கொள்வது எப்படி? என்ற தலைப்பில், கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமிற்கு கோவை வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி தலைமை தாங்கினார். போலீஸ் கூடுதல் டி.ஜி.பி. சைலேந்திரபாபு கலந்து கொண்டு, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

அப்போது, தொழில்நுட்ப தகவல்களை பரப்புதல், வேளாண் கல்வி, வேளாண் ஆராய்ச்சி, தோட்டக்கலை மேம்பாடு, நெல், சிறுதானியம், பயறுவகை பயிர்கள், நீர் நிர்வாகம், மின்னணு விரிவாக்கம், நானோ தொழில்நுட்பங்களில் நவீன முன்னேற்றங்கள் பற்றிய தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

நேரடி செயல் விளக்கம்

இதேபோல் விரிவாக்க கல்வி இயக்கம், நீர் தொழில்நுட்ப இயக்ககம், பண்ணை மேலாண்மைத்துறை, மின்னணு விரிவாக்க மையம், நெல் இனப்பெருக்க நிலையம், சிறுதானிய மற்றும் பயறுவகைப்பயிர்கள் துறை, நானோ தொழில்நுட்பத்துறை, வேளாண் எந்திர ஆராய்ச்சி மையம் ஆகிய துறைகளின் செயல்பாடுகள் பற்றி அதிகாரிகளுக்கு நேரடி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், வேளாண் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பணிகளில் வேளாண் பல்கலைக்கழக மாணவர்கள் தேர்ச்சி பெற்றது தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்தில் பயிரிடப்பட்டு உள்ள பயிர்கள், அவற்றின் பராமரிப்பு முறைகள் பற்றி, வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மூலம் நேரடி விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த பயிற்சிக்கான ஏற்பாடுகளை விரிவாக்க கல்வி இயக்கக தலைவர் பிலிப் தலைமையிலான பேராசிரியர்கள், மாணவ- மாணவிகள் செய்திருந்தனர்.

**தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு 1,113 டன் நெல்மூட்டைகள் அரவைக்காக சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டது**



தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு சரக்கு ரெயில் மூலம் 1,113 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

<u>நெற்களஞ்சியம்</u>

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா அறுவடை பணிகள் முடிவடைந்துள்ளன.

அறுவடை செய்யப்படும் நெல் தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபகழகங்கள் மூலம் நேரிடையாக கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. அங்கிருந்து நெல் மூட்டைகள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள சேமிப்புக்கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்பட்டு இருப்பு வைக்கப்படுகின்றன. இது தவிர வெளி மாவட்டங்களுக்கு லாரிகள் மூலமும், சரக்கு ரெயில் மூலமும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளுக்கும் அரவைக்கு நெல் மூட்டைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

<u>1,113 டன்</u>

தஞ்சையில் இருந்து நேற்று சரக்கு ரெயில் மூலம் 1,113 டன் நெல்மூட்டைகள் திருவள்ளூர் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதற்காக பல்வேறு கொள்முதல் நிலையங்கள் மற்றும் சேமிப்புக்கிடங்கில் இருந்து லாரிகளில் நெல் மூட்டைகள் ஏற்றி வரப்பட்டு 29 ரெயில் வேகன்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

**தத்துப்பூச்சி தாக்குதலால் உதிரும் மாம்பிஞ்சுகள் ஆலோசனை வழங்க விவசாயிகள் கோரிக்கை**



**வேதாரண்யம்,**

வேதாரண்யம் பகுதியில் கோடை வெயில் மற்றும் தத்துப்பூச்சி தாக்குதலால் மாம்பிஞ்சுகள் உதிர்ந்து வருகின்றன. இதை கட்டுப்படுத்த ஆலோசனை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மா சாகுபடி**

நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகாவில் செம்போடை, தேத்தாக்குடி, புஷ்பவனம், கத்தரிப்புலம், ஆயக்காரன்புலம், கரியாபட்டினம், தென்னம்புலம், மருதூர், தாமரைப்புலம் உள்பட 25-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஓட்டு, நீலம், ருமேனியா, பங்கனாபள்ளி, செந்தூரா ஆகிய வகை மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த பகுதியில் சராசரியாக ஆண்டுக்கு சுமார் 5 ஆயிரம் டன் மாங்காய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த மாங்காய்கள் இங்கிருந்து தமிழகத்தின் பிற பகுதிகள் மட்டுமின்றி கேரளா, கர்நாடகா, ஆந்திரா, போன்ற வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**பூச்சி தாக்குதல்**

இந்த மாங்காய் ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு சராசரியாக சுமார் ரூ.10 கோடி வரை விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்கிறது. இந்தநிலையில் இந்த ஆண்டு இந்த பகுதிகளில் உள்ள மாமரங்களில் அதிக அளவில் பூக்கள் பூத்து குலுங்கின. இதனால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் பருவமழை குறைவாக பெய்ததாலும், கடும் வெயில் தாக்கத்தாலும் மா மரங்களை தத்துப் பூச்சி நோய் அதிக அளவில் தாக்கி வருகிறது. இந்த பூச்சி தாக்குதலாலும், கடும் வெயிலாலும் மாம்பிஞ்சுகள் கறுப்பு நிறமாகி உதிர்ந்து வருகின்றன.

மரத்திலிருந்து உதிரும் மாம்பிஞ்சுகள் கிலோ ரூ.1-க்கு மட்டும் விலை போகிறது. மாம்பிஞ்சுகளை எடுக்கும் கூலிக்கு கூட பணம் கிடைக்காததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். எனவே மாமரத்தில் தத்துப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த விவசாய துறையினர் தகுந்த ஆலாசனை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 2 உணவு பதப்படுத்தல் பூங்கா: மத்திய அரசு அனுமதி




ஹைதராபாதில் நடைபெற்ற உணவு பதப்படுத்தும் தொழில் தொடர்பான கருத்தரங்கில் (இடமிருந்து) மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் சிராஜ் ஹூசைன், கூடுதல் செயலர் ஜெகதீஷ் மீனா மற்றும்(அசோசாம் தெற்கு மண்டல தலைவர் ரவிந்திர சன்னா ரெட்டி | படம்: பி.வி.சிவக்குமார்.

ஆந்திர மாநிலத்தில் 2 பிரம்மாண்டமான உணவு பதப்படுத்தல் பூங்கா அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கு கோதாவரி பகுதியிலும் மற்றொன்று நிஜாமாபாதிலும் அமைய உள்ளது. இந்த உணவு பதப்படுத்தும் பூங்கா அமைப்பதற்கான பணிகள் 2015-ம் ஆண்டு இறுதியில் முடிவடையும். ஆந்திர மாநில தொழில்துறை மற்றும் வர்த்தக அமைச்சகத்தின் முதன்மைச் செயலர் ஜே.எஸ்.வி. பிரசாத் இத்தகவலைத் தெரிவித்தார்.

நிஜாமாபாதில் அமைய உள்ள உணவு பதப்படுத்தும் மையம் வேளாண் பயிர்களை பாதுகாக்கவும், பீமாவரத்தில் உள்ள பூங்கா வேளாண் பொருள்களை பதப்படுத்தவும் உதவும். இந்த பதப்படுத்தும் மையங்கள் தலா ரூ. 120 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த மையத்தில் தொழிற்சாலைகள் அமைக்க வரும் நிறுவனங்களுக்கு போதிய மானிய உதவிகள் அளிக்கப்படும். ஒவ்வொரு பூங்காவிலும் ரூ. 500 கோடிக்கான முதலீட்டு வாய்ப்புகள் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.